# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.1.2019) சேலத்தில், சேலம் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா மணிமண்டபத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை

---

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மணிமண்டபம், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வெண்கல முழுஉருவச் சிலையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெண்கல முழுஉருவச் சிலையும், ஆகிய இரு சிலைகளையும் துவக்குகின்ற பெரிய நிகழ்ச்சிக்கு வரவேற்பு நல்கிய மதிப்பிற்கும் மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே, நிகழ்ச்சியில் பங்கு கொண்ட மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.காமராஜ் அவர்களே, முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, சேலம் மாநகராட்சி ஆணையர் அவர்களே, அரசு உயர் அலுவலர்களே, இந்த சிலை அமைப்பதற்கு பாடுபட்ட நல்ல உள்ளங்களே, அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைக்கு இருபெரும் தலைவர்களும் உருவான காரணத்தினாலேதான், இந்த நாடு செழித்து, வளம்பெற்று, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட கிராமத்திலிருந்து நகரம் வரை இன்றைக்கு பொருளாதாரமானாலும் சரி, கல்வியானாலும் சரி, மருத்துவமானாலும் சரி, அத்தனையிலும், இந்தியாவிலேயே

தமிழகம் முதன்மையாக விளங்குவதற்கு இருபெரும் தலைவர்கள் உழைத்து, தன்னையே நாட்டுக்கு அர்ப்பணித்தவர்கள். குறிப்பாக தமிழ்நாட்டு மக்களுக்கு உழைத்து, ஓய்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர்கள் இருபெரும் தலைவர்கள். இந்த நாட்டிலேயும் சரி, தமிழகத்திலேயும் சரி எத்தனையோ தலைவர்கள் தோன்றியிருப்பார்கள். ஆனால், பேரறிஞர் அண்ணாவுடைய வாரிசாக இரவு, பகல் பாராமல் மக்களுக்காக உழைத்து, தனக்கென்று குடும்பம் இல்லாமல், குடும்பம் என்று சொன்னால், மக்கள் தான் தன் குடும்பம் என்று வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக வாழ்ந்து மறைந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரது மணிமண்டபம், இருபெரும் தலைவர்களுடைய முழு உருவ வெண்கலச் சிலை திறப்பதை நான் இறைவன் கொடுத்த பாக்கியமாக நான் கருதுகின்றேன். நாம் இறைவனை கண்ணிலே பார்த்தது கிடையாது. இறைவன் தோற்றத்திலே, இதயதெய்வம் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாம் இறைவனிடத்திலே என்னென்ன வேண்டுகிறோமோ, அத்தனையும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் வாரி, வாரி நமக்கு வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே தான், அவர்களை தெய்வத்திற்கு சமமாக நாம் போற்றிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, இருபெரும் தலைவர்களின் திருவுருவச் சிலையையும் சேலம் மாநகரத்தினுடைய மையப் பகுதியிலே அமைந்து, நம் அத்தனை பேருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் பெருமை சேர்த்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எத்தனையோ தலைவர்கள் தோன்றுவார்கள், வாழ்வார்கள், மறைவார்கள். ஆனால், இடைப்பட்ட காலத்திலே நாட்டு மக்களுக்கு என்ன செய்தார்கள் என்பது அவர் வாழ்ந்த காலத்திலேதான் சரித்திரம் சொல்லும். அந்த சரித்திரத்தை இருபெரும் தலைவர்கள் வாழ்ந்த

காலத்திலே படைத்துவிட்டு சென்றிருக்கின்றார்கள். அவர்களுடைய திட்டங்கள் அனைத்தும் உயிரோட்டமுள்ள திட்டங்கள். எத்தனை ஆண்டுகாலம் இருந்தாலும் இந்த பூமியிலே அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களும் அவர்களுடைய பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கிராமத்திலே வாழ்கின்ற விவசாயி, விவசாயத் தொழிலாளி, நகரத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய அத்தனை பேரையும் வாழவைத்த தெய்வங்களுக்கு இன்று ஒட்டுமொத்த மக்களின் சார்பாக அவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற விதமாக, பெருமை சேர்க்கின்ற விதமாக, அவர்களுக்கு இன்றைக்கு மணிமண்டபத்தை அமைத்து அவர்களுடைய முழு உருவச் சிலையை திறந்து வைப்பதில் நாம் பெருமை பெறுகின்றோம் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு இப்படி புகழ் பெற்றவர்களுக்கு பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கின்றோம். மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற விதத்திலே அவர்களுக்கு திருவுருவச் சிலையையும், மணிமண்டபத்தையும் அமைத்திருக்கின்றோம், அரசு விழாவாகாவும் கொண்டாடுகின்றோம்.

அந்த வகையிலே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சென்னையிலே மணிமண்டபம், திருவுருவச் சிலை. இன்றைக்கு நாடு போற்றப்படுகின்ற, பட்டி தொட்டி அத்தனை இடங்களிலும் இன்றைக்கு பத்திரிகை என்று சொன்னால், தினத்தந்தி பத்திரிகை தான் அத்தனை மக்களுக்கும் நினைவிற்கு வரும். அந்த புகழ்பெற்ற பத்திரிகையின் சிவந்தி ஆதித்தனாருக்கு திருச்செந்தூரில் 1.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் மற்றும் திருவுருவச் சிலையை நிறுவியிருக்கின்றோம். கரூரில் முன்னாள் அமைச்சர், இந்த நாட்டு மக்களுக்காக உழைத்தவர், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன்னையே

அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த மரியாதைக்குரிய ராமசாமி படையாச்சியாருக்கு சுமார் 2.1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அறிவிக்கப்பட்டு, அவருடைய பிறந்தநாளை அரசுவிழாவாக எடுக்கப்படும் என்று உறுதியளித்தோம். அதுமட்டுமல்ல, அவர் வாழ்ந்த காலத்திலே, நாட்டுமக்களுக்கு செய்த எண்ணற்ற சேவையை பெருமை சேர்க்கின்ற விதத்திலே, அவருக்கு சட்டமன்றத்திலே அவருடைய முழு உருவப்படத்தை திறக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றோம், அதுவும் திறக்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில், விளாத்திகுளத்தில் இசைமேதை திரு.நல்லப்ப சாமி அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நினைவுச்சின்னம். தர்மபுரி, பாப்பாரப்பட்டியில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரத மாதா நினைவாலயம் தற்போது நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், புலித்தேவன் அவர்களுக்கு அரசின் சார்பிலே விழா. இப்படி, நாட்டுக்காக உழைத்தவர்கள், மக்களுக்காக உழைத்து, மறைந்த மாபெரும் தலைவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற விதத்திலே, அம்மாவினுடைய அரசால் இவையெல்லாம் அறிவிக்கப்பட்டு பெருமை சேர்த்திருக்கின்றது என்பதை இந்த நன்னாளிலே சுட்டிக்காட்ட விழைகிறேன்.

நாளையதினம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பிறந்தநாள் விழா. அந்தவிழாவிலே முதல் விழா சேலம் மாநகரம் மட்டுமல்ல, சேலம் மாவட்டமே அவருக்கு விழா எடுக்கின்ற காரணத்தினாலே, நாளையதினம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய சிலை திறக்கப்பட்டு, நாளை காலை 9 மணியளவிலே பிறந்த நாள் விழாவிலே நம்முடைய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த இருக்கின்றார்கள். அந்த விழா நிகழ்ச்சியிலே நீங்கள் அத்தனை பேரும் திரளாக கலந்துகொள்ள வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

ஓமலூர் மெயின்ரோட்டிற்கு பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை என்று பெயர் சூட்டப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஓமலூர் சாலைக்கு புரட்சித்தலைவருடைய பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. பாரத ரத்னா பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெயரை உங்கள் அனைவரின் சார்பில், இந்த சாலையினுடைய பெயர் இன்றைக்கு சூட்டப்பட்டிருக்கின்றது என்று பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு ஊர் பகுதிகளுக்கு செல்ல வேண்டும் என்பதற்காக இன்றைக்கு பேருந்தும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கப்படுகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்கள் விட்டுச் சென்ற பணியை அம்மாவினுடைய அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் உறுதியோடு சொல்லிக் கொள்கின்றேன். எவ்வளவு தடைகள் வந்தாலும், எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் அவர்கள், எவ்வளவு இழிச்சொல்லுக்கும், பழிச்சொல்லுக்கும் ஆளானாலும், அத்தனையையும் தகர்த்தெறிந்து, உங்கள் துணையோடு, இருபெரும் தலைவர்களுடைய ஆசியோடு, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபட்டு மக்களுக்கு சேவை செய்யும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் பன்னீர்செல்வம் அவர்களுடைய நாடாளுமன்ற நிதியிலிருந்து பிரம்மாண்டமான இந்த ஓமலூர் சாலை நாளையிலிருந்து பெயர் மாற்றப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டவுடன் இந்த சாலை பாரதரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை என்று பெயர் சூட்டப்படும். அந்த சாலையிலே மிகச் சிறப்பாக, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பிரம்மாண்டமான மின் கோபுரத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றார், அதையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறக்கின்றேன்.

மின்கோபுரத்தை அமைத்துக் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு பாராட்டுக்களை உங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மகத்தான ஆதரவின் பேரில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பிறந்தநாள் அன்றும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்தநாள் அன்றும் இன்று என்னால் திறந்துவைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தில் அமைந்துள்ள மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற, மேடையிலே வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், ஒட்டுமொத்த கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், மனமார, உளமாற நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**